**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 01.04.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். SA 16830/SCIC/2023

திரு.சேலம் சாதிக் பாஷா ... மேல்முறையீட்டாளர்
கதவு எண்.43, முதல் மாடி, அரை மஜிதே
அன்சர் வீதி, கூஜா காம்பவுண்ட்
வாணியம்பாடி, திருப்பத்தூர் - 635 751.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம் ... பொது அதிகார அமைப்பு
செங்கல்பட்டு மாவட்டம்.

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 03/07/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், செங்கல்பட்டு மாவட்டம், அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "பார்வை: 1)காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம் சலமங்கலம் கிராமம் புல எண்.226 உட்பிரிவு 4C பரப்பு 12000, நம்பர் 92, 93, 94, 95, 96 சார்பதிவாளர், திருப்பெரும்புதூர் - தொடர்பாக - பார்வை-1-ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து புல எண்களுக்கும் A-Register (அ-பதிவேடு),ன் பக்க நகல் வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் " என்பன போன்று 5 (ஐந்து) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

2. பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 08/08/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் / துணைப் பதிவுத்துறைத் தலைவர், சென்னை மண்டலம் அவர்கள் மனுதாரரின் மனுவை

அசலாக பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்து கடித எண்.5697/ஆ1/2023, நாள் 17/08/2023 வாயிலாக பொதுத் தகவல் அலுவலர்/மாவட்டப் பதிவாளர், செங்கல்பட்டு அவர்களுக்கு அனுப்பி மனுதாரருக்கு நேரடியாக தகவல்களை அனுப்ப அறிவுறுத்தியுள்ளதோடு, அதன் நகலை மனுதாரருக்கும் அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 28/09/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 16830/SCIC/2023 ஆக பதிவு செய்தது. மேலும், மனுதாரர் 28/12/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை கடிதம் அனுப்பியுள்ளார்.

3. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 01/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. எவ்வித கடிதமும் மனுதாரரிடமிருந்து பெறப்படவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள் 2012) விதி-7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அன்னாரது வருகையின்மை பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி ப.புனிதா, மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), செங்கல்பட்டு மாவட்டம் அவர்கள் ஆஜரானார்.

**ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில் மனுதாரரின் 03/07/2023 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர் திருமதி.இந்திரா (தற்போது உதவிப் பதிவுத்துறைத் தலைவர், சென்னை மண்டலம்) எவ்வித தகவலையும் மனுதாரருக்கு வழங்கவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, திருமதி.இந்திரா அவர்கள் மீது பிரிவு 20(1), 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் பெற்று ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

மேலும் பொதுத் தகவல் அலுவலர் தெரிவிக்கையில், மனுதாரரின் 08/08/2023 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை, மேல்முறையீட்டு அலுவலர்/பதிவுத் துறைத் துணைத் தலைவர். சென்னை மண்டலம் அவர்கள் 17/08/2023 தேதியிட்டு மாவட்டப் பதிவாளர், செங்கல்பட்டு அவர்களுக்கு அனுப்பி மனுதாரருக்கு தகவல்களை வழங்க அறிவுறுத்தியுள்ளதோடு, அதன் நகலை மனுதாரருக்கும் அனுப்பியுள்ளார். அதனைத் தொடர்ந்து 10/10/2023 தேதியிட்டு மனுதாரருக்கு தகவல்களை அனுப்பியுள்ளதோடு, மீண்டும் 06/12/2024 மற்றும் 28/03/2025 தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்து, அதன் நகல்களை ஆணையத்தின் முன்பாக சமர்ப்பித்தார். ஆணையத்தின் நேரடி விசாரணையில் பங்கேற்று, தனது வாதுரையை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. எனவே, இவ்விரண்டாம்

மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

## <u>வழக்கு எண். SA 16830/SCIC/2023</u>

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
செங்கல்பட்டு மாவட்டம்.

திருமதி. இந்திரா
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர், செங்கல்பட்டு பதிவு மாவட்டம்
(தற்போது) உதவி பதிவுத்துறைத் தலைவர்
சென்னை மண்டலம்

**மேல்முறையீட்டாளர்**

திரு.சேலம் சாதிக் பாஷா
கதவு எண்.43, முதல் மாடி, அரை மஜிதே
அன்சர் வீதி, கூஜா காம்பவுண்ட்
வாணியம்பாடி, திருப்பத்தூர் - 635 751.

நகல்

1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
பட்டினப்பாக்கம், சென்னை-600 028.

2. பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035 (for follow up)

RG/PC